# <u>RECORD OF DEPOSITION OF WITNESS</u>

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | OS.56 / 2020 | **DW - 2** | : | Cross |
| **Name** | மாது | **Father Name** | : | தண்டபாணி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 29.10.2025 administered by District Munsif, Uthangarai.

துவக்க நேரம் - 03.40 PM

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

1. நான் ஏழாம் வகுப்பு வரை படித்துள்ளேன் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பானை ஏதும் வந்ததா என்றால் வரவில்லை. எனது அம்மா பெயர் ஆண்டாள் அப்பா பெயர் தண்டபாணி. எனது அம்மா வீட்டில் தான் உள்ளார் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனது அம்மாவிற்கும் எனக்கும் நன்கு தெரியும் என்றால் சரியல்ல தெரியாது. வழக்கு விவரங்களை தெரிந்து கொண்டு எனது அம்மா வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்று விட்டுவிட்டார், அவருக்கு எதிராக ஒருதலைபட்சம் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா 1,2 அயிட்டம் சொத்துக்கள் பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கும் எனது அம்மாவிற்கும் நன்கு தெரியும் என்றால் எனது அம்மாவிற்கு தெரியாது. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் 2 ஆம் இன சொத்து இரண்டாம் பிரதிவாதியின் சுவாதின அனுபவத்தில் இருந்து வருவதாக கூறியுள்ளேன் அதன் சர்வே எண் என்னவென்றால் சர்வே எண் 217/2 ஆகும். அதன் பரப்பளவு தெரியுமா என்றால் தெரியாது.

2. 30 வருடங்களுக்கு முன்பு நத்தம் பட்டா வழங்கியபோது வாதியின் தந்தை வழி தாத்தா கண்ணன் என்பவர் பெயரில்தான் பட்டா வழங்கப்பட்டது என்று சொன்னால்

சரியல்ல அன்பு என்ற பெயரில் தான் உள்ளது. அதன் அடிப்படையில் தாவா 1, 2 இன சொத்துக்கள் பொறுத்து கடந்த 21.10.2009 தேதியில் தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. வாதியின் தாத்தா பெயரில்தான் வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டது என்ற விவரம் எனக்கு நன்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல அன்பு பெயரில்தான் உள்ளது. 2 ஆம் பிரதிவாதி கட்டிடம் கட்டி உள்ளதாக சொல்லி உள்ளேன் என்ன கட்டிடம் என்றால் வீடு கட்டியுள்ளார். அதற்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை சோலார் இணைப்புதான் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த கட்டிடத்திற்கு பஞ்சாயத்தில் வரி கட்டப்பட்டுள்ளதா என்றால் அது எனக்கு தெரியாது. எனது அம்மா மீது வழக்கு தாக்கல் செய்துள்ளதால் 2-ஆம் பிரதிவாதி கட்டிடம் கட்டி உள்ளதாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல . முதல் விசாரணை வாக்குமூலத்தில் பாப்பாரப்பட்டி கிராமத்தில் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தை அத்துமீறி விவசாயம் செய்து வருகிறார் என்று கூறியுள்ளேன் அது தொடர்பாக என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரியும் நடைபெற்று வருகிறது. இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 13/23 என்ற வழக்கை இந்த வாதி தாக்கல் செய்து நடத்தி வருகிறார் அதில் எனது மனைவியும் பிரதிவாதியாக உள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் . அந்த வழக்கை எனது மனைவி நடத்தி வருகிறார் என்று சொன்னால் அரசாங்கம் தான் நடத்தி வருகிறது.

3. கடந்த 24.09.2023 தேதியில் வாதியின் மனைவி சங்கீதாவை நாங்கள் அடித்து காயப்படுத்தியதாக புகார் கொடுக்கப்பட்டு ஊத்தங்கரை காவல் நிலைய மனு ரசீது எண்.158/2023 என்ற புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேலும் கடந்த 11.09.2024 தேதியில் வாதியின் தாயார் சென்னம்மாள் என்பவரை நாங்கள் அடித்து காயப்படுத்தியதாக ஊத்தங்கரை காவல் நிலைய மனு

ரசீது எண்.182/ 2024 என்ற மனு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அந்த புகார் எனது அம்மா ஆண்டாள் நான் மாது ஆகிய நான் மற்றும் வேடியப்பன், கணேசன் ஆகியோர் தாக்கியதாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதை மனதில் வைத்துக்கொண்டு நான் வாதிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது மறு விசாரணை இல்லை.

**முடிவு நேரம் –04.00 PM**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-XXXX

District Munsif(FAC),

Uthangarai.